ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:16 மே 2011 கானம்:10

| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 182 | 04 | பாகவத பழம் -14 | 08 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 | இராமகிருஷ்ணர் ஏற்க மறுத்த ஜிலேபி | 12 |

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

ஆலயத்திற்கு செல்லும்பொழுது, படிக்கட்டுகளில் ஏறி அதை கால்களால் மிதித்துக்கொண்டே செல்கின்றோம். அந்த படிக்கட்டுகள் கருங்கற்களால் ஆனவைகளே. உள்ளே உள்ள மூர்த்தியும், அதே கருங்கற்களால் ஆனதே. ஆனால் அந்த மூர்த்திக்கு பலவிதமான ராஜ உபசாரங்கள் செய்து தலையினால் வணங்குகின்றோம். அதனால் பக்தி என்பது பாவத்தில்தான் (भावम्) இருக்கின்றது. இத்தகைய உயர்ந்த பாவங்கள் குரு க்ருபையால்தான் மேலும் மேலும் அதிகரிக்கும்.

– பக்த துக்காராம் மஹராஜ்

# ஸ்ரீஸ்வாமிஜியின் மீது ஸ்லோகம்

அபிநந்தன பத்ரிகா (வாழ்த்து மடல்)

ஸ ஜாதோ யேன ஜாதேன யாதி வம்ச: ஸமுன்னதிம்

(எவனால் குலத்திற்கு பெருமை ஏற்படுமோ? அவனே ஸத்புத்திரனாவான் – நீதி ஸதகம்)

ப்ரேமிக பவன ஸ்தாபயிதா; ப்ரேமார்த்ர ஹ்ருதய ஸாதுவ்ருத: ।

ப்ரேரித பக்திமார்க ஸஞ்சாலயிதா; ப்ரேரயதி ஜனான் ஸன்மார்கே ॥

ப்ரேமிக பவனத்தை நிர்மாணித்த, அன்பினால் நனைந்த மனதுடைய குணவானே! பக்தி மார்க்கத்தை தூண்டி வளர்ப்பவரே! நீர் மக்களை ப்ரேம மார்க்கத்தில் செல்ல வைக்கிறீர்.

ப்ராரம்பாத் விக்ருத சித்தவந்தம் ப்ரார்தனயா வஷீகரோதி பவான் ।

ப்ரகதிம் அகணித மார்கேஷு ப்ராப்தோ கதமிதி விஸ்மிதம் சிந்தம் ॥

தொடக்க முதலே புத்தி விபரீதமடைந்தவரை ப்ரார்த்தனையின் மூலம் வசீகரித்தவரே! எண்ணற்ற மார்க்கங்களில் முன்னேற்றமான இடத்தை நீர் பெற்றது எங்ஙனமென்று வியப்பு உண்டாகின்றது.

ஆகத ஸாதுஜன ஆஸ்ரயதாதா ஆஷு தேஷாம் அவினயம் ஹரத்யேவ ।

ஆகம பதா கச்சன் ஆச்சர்யம் ஜனயதி ஸர்வேஷாம் மனஸி ॥

நீர் உம்மை அண்டியவருக்கு நல்வழி காட்டுகின்றீர். அவர்களது தீய நடவடிக்கைகளை விரைவில் நீக்கிவிடுகின்றீர். வேதம் விதித்த முறைப்படி நடக்கின்ற நீர் எல்லோர் உள்ளத்திலும் வியப்பை ஏற்படுத்துகின்றீர்.

ப்ரச்னோத்தர மாலிகா ஸத்ருஷ வார்தாலாப:; ப்ரகடயதி நிஜப்ரபாவம் ஜகதி ।

ப்ரகாசமய ஸத்வ்ருத்தேன ப்ரலோபயதி ஸமாகதான் பக்தான் ॥ "ப்ரச்னோத்தர

ரத்னமாலிகா" என்ற நூல் போல் உமது பிரசங்கங்கள் கேள்வியும் பதிலுமாக சிறப்பாக அமைந்துள்ளன. அதனால் அனைத்து மக்களும் உம்மை ஆஸ்ரயிக்க விரும்புகின்றார்கள். உமது மிக சிறந்த செயல்திட்டங்களால் "இப்படியும் ஒரு இளைஞரா?" என்று மக்களை ஏங்க வைக்கின்றீர்.

ஸம்ப்ரதாய பங்காத் விநிர்முக்த: ஸத்பாவனயா ப்ராப்த யஷ:புஞ்ஜ: I

ஸகலலோக ஹிதைஷி யுவக; ஸம்ருத்திமியாத் தவ ஸாதுவாதிதா II

உமது செயல்திட்டங்களில் எந்தவொரு மதப்பிரிவினரும் குறைகூறும்படியான விஷயம் ஒன்று கூட புலப்படுவதில்லை. (எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படியாக இருக்கின்றது). நற்சொல், நற்செயல் – இவற்றினால் நாளும் நல்வழி என்னும் ஏணியில் ஏறிச் சென்று கொண்டிருக்கின்றீர். அனைத்துலக மக்களின் நன்மையை விரும்பும் இளைஞரே! உம்முடைய நற்கருத்துக்கள் மென்மேலும் உலகில் பரவட்டும்.

முரளீதர: முரளீ மனோஹர பக்த: I

முமுக்ஷு மார்கம் முதா தர்சயதி ஸர்வேஷாம் II

முரளீதரன் என்ற பெயர் கொண்ட நீர், முரளியின்(கிருஷ்ணனின்) பக்தர். உங்களை அண்டியவருக்கு மோக்ஷம் அடைவதற்கான வழியை உபதேசிக்கிறீர்.

மங்களானி பவந்து இவண்

வழுத்தூர் ஆழிக்கையன்

இந்த இதழில் ஸ்ரீஸ்வாமிஜியின் பண்டரீ யாத்திரை படங்கள்

முன் அட்டை: ஸ்ரீபாண்டுரங்கன் சன்னதியில்

பின் அட்டை: சஜ்ஜன்காட் ஸந்த் ஸமர்த்த ராமதாஸர் சமாதியில்

# மதுரமான மஹனீயர் - 182

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

"ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்" என்ற தலைப்பில் STAR VIJAY TVயில் ஸ்ரீமத் பாகவதத்தின் பத்தாவது ஸ்கந்தமும், அதை தொடர்ந்து ஸ்ரீமத்பாகவதத்தின் முதல் ஸ்கந்தமும் வந்து கொண்டிருக்கின்றன. இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. இதைத் தொடர்ந்து "வீடு தேடி வருகிறான் விட்டலன்" என்ற தலைப்பில் விட்டல பக்தர்களின் சரித்திரங்கள் வர உள்ளது. அதற்கான Recording செய்வதற்காக ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பிரதிஷ்டானபுரம், ஆலந்தி, சஜ்ஜன்காட், தேஹு, பண்டரிபுரம் மற்றும் அதை சுற்றி உள்ள கிராமங்களுக்கு யாத்திரை (ஏப்ரல் 12-18) மேற்கொண்டார்கள்.

பண்டரி யாத்திரை கிளம்புவதற்கு முன்பாக, விட்டலாபுரத்தில் இருக்கும் நம் விட்டலனை ஸேவித்து விட்டு செல்ல ஸ்ரீஸ்வாமிஜி ஆசைப்பட்டார்கள். அதன்படி யுகாதியன்று விட்டலாபுரம் சென்று, அங்கு இருக்கும் விட்டலனுக்கும், பாமா-ருக்மிணிக்கும் புது வஸ்திரம் சாற்றினார். ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்து சுமார் மூன்று மணி நேரம் நாமகீர்த்தனம் செய்தார். அதன்பிறகுதான் பண்டரிபுரத்திற்கு கிளம்பினார்.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பண்டரி சென்ற சமயம் ஸ்ரீராம நவமி மற்றும் சித்திரை ஏகாதசி போன்ற புண்ணிய தினங்களின் சமயமாக அமைந்ததால், பண்டரியில் நல்ல கூட்டம். லட்சக்கணக்கில் பக்தர்கள் கூடி இருந்தனர். எந்த வாகனமும் ஊரின் உள்ளே செல்ல அனுமதி இல்லை. நம் ஸ்ரீஸ்வாமிஜிக்கு கூட்டம் என்றாலே ஒத்துக்கொள்ளாது. அதுபோல CLOSED AREAவும் ஒத்துக்கொள்ளாது. அதனாலேயே பொதுவாக கூட்டம் அதிகம் உள்ள க்ஷேத்திரங்கள், நீண்ட கியூ வரிசை, லிஃப்ட், டிரெயின், விமானம் இவற்றையெல்லாம் பெரும்பாலும் தவிர்த்து விடுவார்.

இவ்வளவு தூரம் பண்டரி வந்தும், பாண்டுரங்கனை, தான் தரிசிக்க போவதில்லை என்றே இருந்தார். "சந்திரபாகாவில் ஸ்நானம் செய்தேன்,

நாமகீர்த்தனம் செய்தேன், உபன்யாசம் செய்தேன், க்ஷேத்ரவாசிகளையும் வந்திருக்கும் சாதுக்களையும் பார்த்தேன், இதுவே போதும்" என்று சமாதானம் அடைந்துவிட்டார். கோவிலின் மொத்த நிர்வாகத்திற்கும் பொறுப்பு வகிக்கும் E.O, "நான் உங்களை என்னுடன் ஸ்பெஷல் ஆக அழைத்து சென்று தரிசனம் செய்து வைக்கின்றேன்" என்றார். ஸ்ரீஸ்வாமிஜி அதற்கு சம்மதிக்கவில்லை. கோவில் அர்ச்சகர்கள் தனியே அழைத்து சென்று தரிசனம் செய்து வைக்கின்றேன் என்றார்கள். ஸ்ரீஸ்வாமிஜி அதையும் மறுத்துவிட்டார். "ஒரு சிபாரிசு பிடித்து ஸ்வாமியை தரிசனம் செய்ய, தான் விரும்பவில்லை; விட்டலனே, தரிசனம் தரவேண்டும் என்று பிரியப்பட்டால் தரட்டும்" என்று விட்டுவிட்டார். யாத்திரையும் பூர்த்தியாகிவிட்டது.

மறுநாள் அதிகாலை ஐந்து மணிக்கு, ஸ்ரீஸ்வாமிஜி சென்னை கிளம்ப போகின்றார். முதல் நாள் இரவு திடீரென்று இடியுடன் கூடிய நல்ல மழை பெய்தது. ஸ்ரீஸ்வாமிஜியின் உள் உணர்வு ஏதோ உணர்த்த, மழையிலும் கோவிலுக்கு சென்றார். என்ன அதிசயம்! சுட்டெரிக்கும் கோடை வெயிலில் திடீரென்று மழை பெய்ததால், கோவிலில் ஆளே இல்லை! கூட்டமும் இல்லை! கியூ வரிசை இல்லை! நேராக சென்று விட்டலனை தரிசனம் செய்தார். ருக்மிணியையும் தரிசனம் செய்தார். லட்சக்கணக்கானோர் திரண்டிருந்த பண்டரியில் ஸ்ரீஸ்வாமிஜி பாண்டுரங்கனை தரிசிக்கையில், அவன் சன்னதியில் ஸ்ரீஸ்வாமிஜியையும் பாண்டுரங்கனையும் தவிர, வேறு ஒருவரும் இல்லை! விட்டலனின் கிருபையை நினைத்து நெகிழ்ந்தார் ஸ்ரீஸ்வாமிஜி. பாண்டுரங்க லீலை என்று நாம் நிறைய சொல்லி வருகின்றோம். இதுவும் பாண்டுரங்கனுடைய மற்றொரு லீலையே என்று சொல்லி, எல்லையில்லாத மகிழ்ச்சியை அடைந்தார்.

ஸ்ரீஸ்வாமிஜியின் உபன்யாசம் – "வீடு தேடி வருகிறான் விட்டலன்" – பண்டரிபுர பக்தர்களின் சரித்திரம் – (2/5/2011) மே மாதம் 2ஆம் தேதி முதல், ஸ்டார் விஜய் டிவியில் தினமும் காலை 6.20 முதல் 6.40 வரை ஒளிபரப்பாகும்.



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: ஸகுண சாக்ஷாத்காரம் நேரடியாக நிர்குண சாக்ஷாத்காரத்தில் விடாது. அதற்காக தனியாக அப்யாஸம் செய்ய வேண்டும் என்கின்றார்களே. அது சரியா?

பதில்: இது ஒருபுறம் இருக்கட்டும்; இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன? நேரடியாக நிர்குண உபாஸனை செய்ய கூடாது. ஸகுண உபாஸனை செய்து, பிறகுதான் நிர்குண உபாஸனை செய்ய வேண்டும் என்பதே அது.

கேள்வி: ஒருவர் இறந்து விட்டால் முதல் நாள் ஒரு சடங்கு, இரண்டாம் நாள் ஒரு சடங்கு, பத்தாம் நாள் ஒரு சடங்கு, பதினொன்று, பனிரெண்டு நாட்களில் ஒரு சடங்கு செய்கின்றார்கள். அதோடு மட்டும் அல்லாமல் மாதாமாதம், வருடத்திற்கு ஒருமுறை என்று எல்லாம் சடங்கு செய்கின்றார்களே? இது என்ன கணக்கு?

பதில்: ஒரு குழந்தை பூமியில் திடீர் என்றா தோன்றுகின்றது? கருவில் நுழைந்து, பத்து மாதங்கள் வரை கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்துதான் பூமியில் ஜனிக்கின்றது. பிறந்த பிறகும் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வளருகின்றது. அதுபோல் ஒருவர் இறந்த உடனே "சர்" என்று மேல் உலகம் செல்வதில்லை. அதற்கு ஒரு கால அவகாசம் இருக்கின்றது. அந்த கால அவகாசத்தின்படிதான், அது பல கட்டங்களை தாண்டி செல்ல வேண்டி உள்ளது. அதன் அடிப்படையில்தான் இந்த சடங்கு எல்லாம் வைக்கப்பட்டுள்ளது.

கேள்வி: எந்த மஹான்களின் சரித்திரத்தை படித்தாலும், அவர் அந்த தெய்வத்தின் அம்சம் அல்லது இந்த மஹாத்மாவின் அம்சம் என்று வருகின்றதே. எங்களை போன்ற சாமான்ய மனிதர்கள் இறைவனை அடைய முடியுமா? முடியாதா?

பதில்: ஏதோ ஒரு தெய்வத்தின் அம்சமாகவோ, அல்லது மஹாத்மாவின்

அம்சமாகவோ வருபவருக்கு, இறைவனை அடைவது சுலபமாக இருக்கலாம். நம்மை போன்றவர்களுக்கு சற்று கூடுதல் கடினமாக இருக்கலாம். அவ்வளவுதான். விடாமுயற்சியின் இலக்கணமாக திகழ்ந்த விஸ்வாமித்திரர் ரிஷியாக ஆகவில்லையா? அதுபோல், நாமும் கஷ்டப்பட்டு, விடாது முயற்சி செய்தால், அடைய முடியாதது ஒன்றும் இல்லை.

ஒரு தாயாருக்கு எல்லா குழந்தைகளிடமும் அன்பு இருந்தாலும், தன் குழந்தையிடம் ஒரு பொங்கும் பரிவு ஏற்படுகின்றது. அது போல், பகவானுக்கு எல்லா ஜீவராசிகளிடமும் பொதுவான கருணை இருந்தாலும், ஹரி நாம கீர்த்தனம் செய்பவர்களிடம் விசேஷமான கருணை ஏற்படுகின்றது.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி





# பாகவத பழம் (14)

**பாகம் 2 – அத் 3**

– ஸ்ரீஸ்வாமிஜி



மூன்றாவது அத்யாயத்தில், ஸூதர், பகவான் வாஸுதேவனின் அவதாரங்களைப் பற்றி வர்ணிக்க ஆரம்பிக்கின்றார். உலக ஸ்ருஷ்டிக்காக பகவான் விராட் ஸ்வரூபமாக ஆனான். இதே பகவான்தான் பல்வேறு அவதாரங்களைச் செய்து உலகத்தையும் தர்மத்தையும் ரக்ஷிக்கின்றான்.



முதலில் பிரம்மசர்யத்தின் பெருமையை ஸ்தாபிப்பதற்காக, ஸனகாதிகளாக அவதாரம் செய்தார். இண்டாவதாக, ப்ரளய ஜலத்தில் மூழ்கியிருந்த பூமியை வெளியில் கொண்டுவர யக்ஞ வராஹ மூர்த்தியாக அவதரித்தார். மூன்றாவதாக வைஷ்ணவ தர்மத்தை ஸ்தாபிக்க, நாரதராக அவதரித்தார். நான்காவதாக, தவத்தின் பெருமையை நிலைநாட்ட நரநாராயணர்களாக அவதரித்தார். ஐந்தாவதாக, ஸாங்க்ய யோகத்தைப் பிரகாசப்படுத்த கபிலாவதாரம் செய்தார். ஆறாவதாக, அத்ரிக்கும் அனசூயைக்கும் தத்தாத்ரேயராக அவதரித்தார். அப்பொழுது பிரஹ்லாதன், அலர்கன் ஆகியோருக்கு



தத்துவ உபதேசம் செய்தார். ஏழாவதாக ருசி பிரஜாபதிக்கும், ஆகூதிக்கும் புத்திரராக "யஞ்யன்" என்று அவதரித்து, இந்திரனாக இருந்துகொண்டு உலகத்தை 'யம' என்ற புத்ரர்களுடன் சேர்ந்து பரிபாலித்து வந்தார். எட்டாவதாக, நாபிமஹாராஜனுடைய புத்ரனாக ரிஷப யோகீஸ்வரராக அவதரித்து ஸன்யாச தர்மத்தை நிலைநாட்டினார். ஒன்பதாவதாக ப்ருதுமஹாராஜனாக அவதரித்து, பசுரூபத்தில் இருந்த பூமியிடமிருந்து அவரவர்களின் தேவைகளையும், ஆசைகளையும்



பூர்த்தி செய்து கொடுத்தார். பத்தாவதாக சாக்ஷுச மன்வந்தரத்தின் முடிவில் மத்ஸ்ய அவதாரம் செய்து, அடுத்த மன்வந்திரமான வைவஸ்வத மன்வந்திரத்தின் மனுவான சத்தியவிரதன் என்ற அரசனைக் காப்பாற்றி வேதத்தை ரக்ஷித்துக் கொடுத்தார். பதினொன்றாவது அவதாரமாக, பாற்கடலை கடைய கூர்மமாக அவதாரம் செய்து, தன் முதுகை மந்திரமலையைத் தாங்குவதற்குக் கொடுத்தார். அப்படி பாற்கடலைக் கடைந்தபொழுது, ஔஷத தன்வந்திரியாக அவதாரம் செய்தது பன்னிரண்டாவது அவதாரம். அசுரர்களை வஞ்சித்து தேவர்களைக் காப்பாற்றிய மோஹினி அவதாரம் பதின்மூன்றாவது அவதாரமாகும். பக்தனான ப்ரஹ்லாதனின் வாக்கியத்தை சத்தியம் செய்யவும், ஹிரண்யகசிபுவை வதம் செய்யவும் வந்த நரஸிம்ம அவதாரம் பதினான்காவது அவதாரமாகும்.



பலியிடம் யாசகம் வாங்க வாமனனாக வந்தது பதினைந்தாவது அவதாரம். துஷ்ட க்ஷத்திரியர்களைக் களையெடுத்த பரசுராம அவதாரம் பதினாறாவது அவதாரம். வேதத்தை நான்காகப் பிரிக்க எடுத்த அவதாரம், வேதவியாஸ அவதாரம் ஆகும். சத்தியவதிக்கும் பராசரருக்கும் பிறந்த வியாஸ அவதாரம் பதினேழாவது





அவதாரம். பதினெட்டாவதாக சேதுபந்தனம் செய்து தேவர்களுக்கு அனுக்கிரஹித்து, ராவணனை வதம் செய்தது ராமாவதாரம். பத்தொன்பது மற்றும் இருபதாவது அவதாரமாக பூமியின் பாரத்தைக் குறைக்க பகவான் கிருஷ்ணனாகவும், பலராமனாகவும் யதுகுலத்தில் அவதரித்தனர். இருபத்தோராவது அவதாரமாக, அஸுர குணமுள்ளவர்களை



மோஹிப்பதற்கு கீகடதேசத்தில் புத்தராக அவதரிப்பார். கலியில் அரசர்கள் துஷ்டர்களாக மாறும்பொழுது இருபத்து இண்டாவதாக கல்கியாக அவதரிப்பார்.

பகவானுடைய அவதாரங்கள் கணக்கில் அடங்காதவை. "*அவதாரா ஹ்யஸங்க்யேயா*'' (1.3.26). பகவான் ஸ்ரீகிருஷ்ணன்தான் பூரணமான பிரும்மம். "கிருஷ்ணஸ்து பகவான் ஸ்வயம்'' அவனே பகவான். அவன்தான் இவ்வளவு அவதாரங்களைச் செய்தான். செய்யவும் போகிறான். இந்த பகவானுடைய அவதாரங்களை காலை, மாலை வேளைகளில் ஒரு தீபம் ஏற்றி பகவானுடைய சன்னதியில் அமர்ந்து தியானிப்பவர்கள் துக்கங்களிலிருந்து விடுபடுவார்கள்.நீங்கள் கேட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் ஒரே புராணத்தில் பதில் இருக்கிறது. *இதம் பாகவதம் நாம புராணம் ப்ரஹ்மஸம்மிதம்'' (1.3.39*) என்றார். இதம் பாகவதம், நாம புராணம் ப்ரஹ்மஸம்மிதம்'' என்று பிரித்தால், இந்த பாகவதம் என்ற புராணம் நாமத்தின் பெருமையைச் சொல்ல வந்த புராணம் என்றும் பொருள்படும். வேதத்திற்கு துல்லியமானது என்றும் பொருள்படும்.

*'கலௌ நஷ்டத்ருஷாமேஸ புராணார்கோ அதுனா உதித:'* கலியின் இருட்டினால் பார்வையை இழந்தவர்களுக்கு பாகவதம் எனும் இந்த புராணம் சூரியன் போல் உதித்துள்ளது.

"இதை வேத வியாஸர் சுகருக்கு சந்தை சொல்லி, திருவை சொல்லச் சொல்லிக் கொடுத்தார். ஸர்வ வேத, இதிஹாச ஸாரமான இந்த பாகவதத்தைக் கங்கைக்கரையில், ஒருசமயம் சுகர் பரீக்ஷித்திற்குச் சொன்னார். அப்பொழுது 24 பிரும்ம ரிஷிகளும் 8 ராஜரிஷிகளுமாகச் சேர்ந்து 32 பேர்கள் உடன் இருந்து கதையைக் கேட்டார்கள். நானும் அங்கு இருந்தேன். அப்பொழுது அவர்கள் சொன்னதை நான் கேட்டதில் எவ்வளவு புரிந்துகொண்டேனோ, எவ்வளவு என் புத்தியில் நினைவில் உள்ளதோ, எவ்வளவு என் ஹிருதயத்திலிருந்து பகவான் தூண்டி எடுத்துக் கொடுக்கின்றானோ, அவ்வளவு இப்பொழுது நான் சொல்லுகின்றேன்" என்று ஸூதர் இந்த கேள்விகள் கேட்ட சௌனகாதிகளிடம் ஆரம்பிக்கின்றார்.

(கனியும்)

OUR HUMBLE PRANAMS TO SRI SWAMIJI

**WE HANDLE ALL TRAVEL RELATED SERVICES**

1. DOMESTIC INTERNATIONAL AIR TICKETING
2. VISAS / PASSPORT
3. INSURANCE
4. FOREIGN EXCHANGE
5. HOTEL RESERVATION & RENT A CAR SERVICES
6. OUTBOUND & INBOUND TOUR PACKAGE

**PL CONTACT**

**EURO WORLD TRAVEL PVT. LTD**

26, FIRST FLOOR, C.P.RAMASWAMY ROAD, ALWARPET, CHENNAI - 600018.
Ph - 9382846979 Ph- 24661228/29, 24671228/29, 24993609/4629
Email - eurotravel@vsnl.net/euroworldtravel@gmail.com

## இராமக்ரு ம

ஸ்வாமி விவேகானந்தரின் குருவான ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருக்கு ஜிலேபிகள் பிடிக்கும். "ஒரு நெரிசலான வீதியில் மக்கள் நடமாடுவது என்பது கடினம். அவர்களால் நடக்கவே கூட முடியாததாக இருக்கலாம். ஆனால், அரசரின் தேர் வந்தால் எல்லோரும் வழி விடுவர் அல்லவா? அதுபோல் வயிறு முழுவதுமாக நிரம்பி இருந்தாலும், ஜிலேபிகளுக்கு மட்டும் இடமுண்டு" என அவர் ஹாஸ்யமுடன் குறிப்பிடுவார். அவரது சீடரான துரியானந்தர் என்பவர் ஒருமுறை தம் குரு இம்மாதிரி அல்ப விஷயங்களில் ஆசை கொள்கிறாரே என நினைத்தார். அப்பொழுது குருதேவர் "என் மனம், உயரே இறைவனை நோக்கி மட்டுமே பறக்கிறது. அதை கீழே இறக்கி, பக்தர்களுடன் பழக வைக்கவே இந்த அல்ப ஆசைகள். இந்த ஆசைகள் இல்லையெனில் என்னால் உலகில் பழக முடியாது. உன்னுடன் பேசவும் முடியாது" என்றார்.



அவருடைய பக்தர் பலராம் என்பவர் ஒருமுறை நிறைய இனிப்புகளை கொணர்ந்தார். அப்படி கொண்டு வருகையில் இரண்டை மட்டும் மனத்தால் குருதேவருக்கு என அர்ப்பணித்தார். ராமகிருஷ்ணரிடம் வந்து கொடுக்கையில், அவர் பலராமை பார்த்தவாறே அந்த இரண்டு இனிப்புகளை மட்டும் எடுத்து கொண்டார். அவர் பல இனிப்புகளை கொண்டு வந்திருந்தாலும், மனதால் பலராம், எந்த இரண்டை அர்ப்பணித்தாரோ, அந்த இரண்டை மட்டுமே ஸ்ரீராமகிருஷ்ணர் புன்னகைத்தவாறே எடுத்து கொண்டார். நாம் எங்கோ மனதால் செய்யும்

> இறைவனுக்கு என்று ஒரு பொருள் தீர்மானிக்கப்பட்ட பிறகு அது எதுவாக இருந்தாலும், இடையில் யாருக்கும் அதை பெறுவதற்கு உரிமை இல்லை.

செயல்களையும், குருதேவர் அறிகிறார் என்பதை பலராம் புரிந்து கொண்டார். இப்படியே யாராவது அன்புடன் கொண்டு வரும் தின்பண்டங்களை கூட அந்தந்த பக்தர்களுக்காக ராமகிருஷ்ணர் எடுத்து கொள்வது வழக்கம்.

அப்படி ஒருமுறை ராம்தத்தா என்ற ஒரு பக்தர், ஜிலேபிகளை குருதேவருக்காக தக்ஷிணேஸ்வரத்துக்கு எடுத்து கொண்டு வந்தார். அவர் வரும் வழியில், அவர் ஒரு பாலத்தை கடக்க வேண்டி வந்தது. அப்பொழுது ஒரு சிறுவன் வந்து அந்த பக்தரிடம் தனக்கு ஒரு ஜிலேபி தருமாறு வேண்டினான். அந்த ஜிலேபிகளை குருதேவருக்கு என ராம்தத்தா தீர்மானித்திருந்ததால், அவற்றில் ஒன்றை கூட, அந்த பையனுக்கு தர, அவர், முன்வரவில்லை. அப்பையன் மீண்டும் மீண்டும் கேட்டான்.

அப்பொழுது ராம்தத்தாவிற்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. குருதேவர்தான் மாற்று உருவில் வந்து கேட்கிறாரோ? என்று சந்தேகித்தார். ஆனால் அதை குறித்து அவருக்கு திடமான சிந்தனை ஒன்றும் உருவாகவில்லை. பையன் திருப்பி திருப்பி கேட்டதால், ஒரு ஜிலேபித்துண்டை ராம்தத்தா பையனுக்கு எடுத்து கொடுத்தார். பின்னர் மேற்கொண்டு தக்ஷிணேஸ்வரம் வந்தார். குருதேவரை நமஸ்கரித்து விட்டு, அவரின் அறையில் ஜிலேபிகளை வைத்து விட்டு அங்கேயே முழு நாளும் இருந்தார் ராம் தத்தா.

மதிய வேளையில் குருதேவர் உண்பதற்கு ஜிலேபிகள் இருந்தால் தருமாறு கேட்டார். தாம் ஏற்கனவே கொணர்ந்திருந்த ஜிலேபிகளை ராம்தத்தா தந்தார். அதை வாங்கி, ஒரு ஜிலேபியை உடைத்து எடுத்து வாயில் போட்டு கொள்ள போன ராமகிருஷ்ணர், சட்டென மேலே நோக்கினார். மேலே நோக்கியவாறு, அதை தனது முக அசைவாலேயே மறுத்து கைகளை தட்டி உதறி கொண்டார். ஜிலேபிகளை எடுத்து கொள்ளவில்லை. மேலும், தனது கைகளை கழுவி கொண்டார் குருதேவர். ராம்தத்தா மனம் வெறுத்து போனார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. வாயில் போட்டுக்கொள்ள போன குருதேவர் வேண்டாம் என உதறி விட்டாரே? அவராக காரணம் சொல்லாமல் அவரிடம் ஒன்றும்

கேட்க முடியாது. குரு ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், என்ன செய்வது? அந்த ஜிலேபிகளை அப்படியே தூக்கி எறிந்து விட்டார் ராம் தத்தா.

அன்று ஒன்றும் பேசவில்லை குருதேவர். அவரிடம் ஒன்றும் கேட்கவும் முடியவில்லை. சில நாட்கள் கழித்து ராம்தத்தா மறுபடி தக்ஷிணேஸ்வரம் சென்றார். அப்பொழுது அவரிடம் குருதேவர் "எனக்கென எதையாவது கொணர்ந்தால், வழியில் அதை வேறு ஒருவருக்கும் கொடுக்காதே. ஏனெனில் நான் இறைவனுக்கு அளிக்காமல் எதையும் உண்ண முடியாது. இறைவனுக்கு மற்றொருவர் உண்டதை என்னால் கொடுக்கவும் முடியாது" என்றார்.

அப்பொழுதுதான், ராம்தத்தாவிற்கு குருதேவர் ஏன் இரண்டு நாட்கள் முன்னர் கொண்டு வந்த ஜிலேபிகளை உண்ண மறுத்தார் என்பது புரிந்தது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், ராம்தத்தா எந்த ஜிலேபிக்கடையிலிருந்து வாங்கி வந்தாரோ, அதே கடையில் நிறைய ஜிலேபிகள் இருக்கும். அதை எவ்வளவோ பேர் வாங்கி சென்று உண்டிருப்பார்கள். அப்படி இருக்க, இந்த பக்தர் கொணர்ந்ததை குருதேவர் ஏற்க மறுத்திருக்கிறார்!

கடையில் இருந்த ஜிலேபிகள் இறைவனுக்கு என ஒதுக்கப்பட்டவை அல்ல. ராம் தத்தா வாங்கிய பிறகுதான் , அவரால்தான் அவை குருதேவருக்கு என ஒதுக்கப்பட்டன. அதன்பின்னரே, அது அவருக்கு என உரியதாயிற்று. இறைவனுக்கு என ஒதுக்கப்பட்ட பின்னரே, அது இறைவனுக்கு அளிக்க உரியதாக ஆகிறது. இதிலிருந்து இறைவனுக்கு அளிப்பதை அவர் நிச்சயம் ஏற்கிறார் என்பதும், அவருக்கு என்று ஒதுக்கியதை வேறு ஒருவர் எடுத்துக் கொண்டால், அது இறைவனால் ஏற்கப்படுவதில்லை என்றும் புலனாகிறது. இறைவனுக்கு என்று ஒரு பொருள் தீர்மானிக்கப்பட்ட பிறகு, அது எதுவாக இருந்தாலும், இடையில் யாருக்கும் அதை பெறுவதற்கு உரிமை இல்லை.

Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting
Private Limited

ஸ்ரீஹரி:

நமாமி வேத மாதரம் வேதோ அகில தர்ம மூலம்

# மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி அவர்களின் பூரண அருளாசிகளுடன்

ஸ்ரீஸாந்தீபனி குருகுல ஸேவா டிரஸ்ட் (A.P) நிர்வாகத்தில்

# 29வது ஸ்ரீமத் அகில பாரத கிருஷ்ணாதீர விஜயசங்கர வேதஸாஸ்திர வித்வத் பரீக்ஷா சபா

**இடம்:** ஸ்ரீஅஹோபில மடம், ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி கல்யாண மண்டபம், நல்லகுண்டா, ஹைதராபாத் **தேதி:** 29, 30, 31 மே 2011

**அத்யக்ஷகர்:** "ஸோமயாஜி" **ப்ரும்மஸ்ரீ தெந்துகுரி வேங்கட ஹனுமத் கணபாடி**

**கௌரவ அத்யக்ஷகர்:** "ஜகன்மித்ர" **ஸ்ரீ தோர்பல ப்ரபாகரசர்மா**

## உபன்யாசம் 29- 5- 2011

**ப்ரும்மஸூத்ர பாஷ்யம் -** "உபய மீமாம்ஸாசார்ய" **ஸ்ரீ மணித்ராவிட் ஸாஸ்திரி**

**ராமாயணத்தில் வேததர்மம் -** "மஹாஸஹஸ்ராவதானி" **டாக்டர் கரிகிபாடி நரஸிம்மராவ்**

## உபன்யாசம் 30- 5- 2011

**உபநிஷத் பாஷ்யம் -** "நியாயவேதாந்த ஆச்சார்ய" **டாக்டர் குப்ப விஸ்வநாத ஸாஸ்திரி**

**மஹாபாரதத்தில் வேததர்மம் -** "மஹாஸஹஸ்ராவதானி" **டாக்டர் கரிகிபாடி நரஸிம்மராவ்**

## உபன்யாசம் 31- 5- 2011

**ஸ்ரீமத்பகவத்கீதா பாஷ்யம் -** "ஸாஸ்திர நிதி" **ப்ரும்மஸ்ரீ விஸ்வநாத கோபாலகிருஷ்ண ஸாஸ்திரி**

**பாகவதத்தில் வேததர்மம் -**"மஹாஸஹஸ்ராவதானி" **டாக்டர் கரிகிபாடி நரஸிம்மராவ்**

**தினமும்** : காலை: கணபதி பூஜை, குரு வந்தனம், வேத பரீக்ஷை -க்ரம, கண ,மூல, பாஷ்யம் / பாண்டித்ய ப்ரகர்ஷ

மதியம்: வேத பரீக்ஷை / பாண்டித்ய ப்ரகர்ஷ, வேத பாஷ்யம்

மாலை: வித்யார்த்திகளின் வேதபடனம், உபன்யாசம், வேத ஸ்வஸ்தி, பிரஸாதம்

ஆஸ்திகர்களும் பக்தமஹாஜனங்களும் திரளாக வந்திருந்து வேதமாதாவின் கிருபைக்கும் ஸத்குருநாதரின் கிருபைக்கும் பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

நிர்வாகக்குழு விஜயசங்கர பக்த ப்ருந்தம்

நிர்வாகிகள் ஸ்ரீசாந்தீபனி குருகுல சேவா டிரஸ்ட், (A.P)

2வது தளம், ஷியாம் அபார்ட்மென்ட்ஸ், 6-3-563/F, எர்ராமன்சில். ஹைதராபத் - 82

மேலும் விவரங்களுக்கு:
ஸ்ரீமதி லதாரவிச்சந்திரன்
09848024928

# பாலகர்களுக்கு ஒரு கதை



## கடவுள் இருக்கிறாரா?

அன்பர் ஒருவர் முடி திருத்தும் கடைக்கு, சிகை அலங்காரத்திற்காக சென்றார். அங்கு, முடிதிருத்துபவரிடம், இந்த அன்பர் பலவிதமான பேச்சுக்களில் ஈடுபட்டு இருந்தார். நாட்டு நடப்புகள், விளையாட்டு, பொழுதுபோக்கு என பல விஷயங்கள் பற்றி இருவரும் பேசி வந்தனர்.

அப்பொழுது, அந்த அன்பர், தாம் சில நாட்களுக்கு முன் சென்றிருந்த ஒரு கோவிலைப் பற்றி பேச முற்பட்டார். உடனே முடி திருத்துபவர் ஒரு கணம் தாமதித்து "ஐயா நான் கடவுள் இருப்பதாக நம்புவதில்லை" என்றார். அவர் தெளிவுடன் பேசியதால் அன்பர் "ஏன் தாங்கள் அப்படி எண்ணுகிறீர்கள் என்று தெரிந்து கொள்ளலாமா? என்றார்.

அதற்கு அந்த கடைக்காரர் "ஐயா கடவுள் இல்லை என புரிந்துகொள்ள நீங்கள் ஒன்றும் புத்திசாலியாக இருக்க வேண்டியதில்லை. கொஞ்சம் பொது அறிவு இருந்தால் போதும்" என்றார். அன்பர் மேலும் ஆர்வமுடன் "எப்படி?" என வினவினார். "நம்மிடையே எத்தனை மனிதர்களுக்கு நோய் வருகிறது? எவ்வளவு குழந்தைகள் அனாதைகளாக வளர வேண்டி இருக்கிறது? கடவுள் என்று ஒருவர் இருந்தால் இப்படி எல்லாம் இருக்க வாய்ப்பு உண்டா? கடவுள் அன்பானவர் என்றால் இத்தகைய துன்பங்கள் எப்படி இருக்க முடியும்? இத்தகு துன்பங்களை அனுமதிக்கும் கடவுளை என்னால் கற்பனை செய்ய இயலவில்லை " என்றார் முடி திருத்தியவாறே அந்த கடைக்காரர்.

மிக நேர்த்தியாக வேலையை செய்யும் அவரிடம் எதோ பேச நினைத்தார் அன்பர். அவருக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. அதை முடி திருத்துபவருக்கு, எடுத்து சொல்ல நினைத்தார். ஆனால் வீணாக ஒரு வாக்குவாதம் தேவையில்லை என நினைத்தார். ஏனெனில் தகுந்த சமயத்தில், தகுந்த விதத்தில் சொல்லப்படாத ஒரு விஷயம் சரியான பலனை தராது. சில மணி துளிகள் கடந்தது. முடி திருத்தப்பட்டது.

அன்பர் கடையை விட்டு வெளியேறினார். அக்கடைக்கு வெளியில்

தெருவோரத்தில், ஒரு மனிதன் கலைந்த தலைமுடியுடன் அன்பர் கண்ணில் தென்பட்டான். அவன் தலை அழுக்காக இருந்தது. நீண்ட தலைமுடியும் மழிக்கப்படாத தாடியும் அவனுக்கு இருந்தது. அவனை பார்த்தவுடன் அன்பருக்கு சட்டென எதோ தோன்றியது. திரும்பி அந்த கடைக்குள் நுழைந்து நாவித நண்பரை பார்த்து "நண்பரே! நான் உலகில் முடி திருத்துபவர்கள் இருப்பதாக நம்பவில்லை" என்றார். உடனே கடைக்காரர் "அப்படி எப்படி நீங்கள் சொல்லலாம்? இதோ நான் இருக்கிறேன். நான் கூட உங்களுக்கு இப்பொழுது முடியை அழகு செய்துவிட்டேனே? கண்ணிருந்தும் குருடர் போல் பேசலாமா " என்றார்.

உடனே அன்பர் "இல்லை இல்லவே இல்லை. முடி திருத்துபவர்கள் உலகில் இருந்தால் நீண்ட தலைமுடி கொண்டவர்களும், சரியாக சிகையை வைத்துக் கொள்ளாதவர்களும் தாடியுடன் அலைபவர்களும் இருப்பரா? இதோ இங்கே ஒரு மனிதன் அப்படி தெரிகிறான். வந்து பாருங்கள்" என்றார். உடனே கடைக்காரர் "நாவிதர்கள் இருக்கிறார்கள். அம்மனிதன் எங்களை பார்க்க வந்தால்தானே, அதை சரி செய்ய முடியும்?" என்றார்.

அன்பர் சளைக்காமல் "அப்படியேதான் நண்பரே! கடவுளும் இருக்கிறார். அவரை மனிதர்கள் தங்களின் தேவைகளுக்கு நாடாமல் இருப்பதால்தான் மனிதர்களிடையே பலவிதமான துன்பங்களை நாம் காண்கிறோம்" என்றார். அன்பரின் பதிலை கேட்டவுடன் கடைக்காரருக்கு நன்றாக உறைத்தது. தனது தவறான எண்ணத்தை போக்கி கொண்டார்.

ஹரி பக்தி ஸித்திக்க, கோடி ஜன்மங்களில் புண்யம் செய்திருக்க வேண்டும். ஆனால் நல்ல குரு கிடைக்கவோ, நூறு கோடி ஜன்மங்களில் புண்யம் செய்திருக்க வேண்டும்.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

# மதம் நமக்குத்தான்; கடவுளுக்கு மதம் இல்லை!

சென்ற இதழில் விருதுநகர் கோமதியம்மாள் அவர்களுக்கு பகவன்னாமத்தினால், நகையும் பணமும் மீண்டு வந்தது பற்றி பார்த்திருந்தோம். அவரது வாழ்வில் நடந்த மற்றொரு சம்பவமும் ஆச்சரியமானது. திருமதி கோமதிக்கு திருமதி ரூபா என்ற குடும்ப நண்பர் உண்டு. அவருடைய கணவர் பெயர் தாமஸ். அவர்களுக்கு டேனியல் என்றொரு குழந்தை இருந்தான். அந்த குடும்பம் மதுரையில் இருந்தது. அவர்கள் கிறிஸ்தவர்களானபடியால், இயேசுநாதரின் மேல் நல்ல நம்பிக்கை கொண்டவர்களாய் அந்த குடும்பம் இருந்தது.

இந்த ரூபா-தாமஸ் தம்பதிகளின் ஏழு வயது மகன் டேனியலுக்கு அடிக்கடி தலைவலி வரும். அதற்கு அவர்கள் பல விதத்தில் சிகிச்சை செய்து பார்த்தனர். எந்த ஒரு சிகிச்சையும் பலனளிக்கவில்லை. தலைவலி வருகையில் எல்லாம், டேனியல் மிகவும் துடித்து போய் அழுவான். பெற்ற மனம் பரிதவிக்கும். வலியை தாம் எடுத்து கொள்ளலாமெனில் அதை செய்யலாம். ஆனால், அப்படி செய்ய முடியாதே? என்ன செய்வது? ஏதாவது வழியில், தம் பிரிய மகனின் கஷ்டத்தை நீக்க ஏதாவது முயற்சி செய்தவாறே இருந்தனர்.

ஆங்கில மருத்துவத்தில் ஒரு டானிக் மட்டும் கொடுத்திருந்தனர். தலைவலி வருகையில் அதை கொடுத்தால் டேனியலுக்கு தூக்கம் வரும். அதனால் தலைவலி குணமாகாது. ஆனால் அதை மறக்க முடியும். டாக்டர் என்ன செய்வார். அவருக்கு தெரிந்த அளவுதான் அவரால் செய்ய முடியும். ஆனால் எத்துனை நாட்கள் இப்படியே இருப்பது? இம்மாதிரி கடின சமயங்களில், யார் என்ன சொன்னாலும் மனம் உடனே அதை செய்து பார்க்க சொல்லும். அப்படித்தான் ஒருவர் ரூபா தம்பதிகளிடம் "உங்களை பிடிக்காத யாரோ ஒருவர், உங்களுக்கு செய்வினை செய்துள்ளனர். அதனால்தான் டேனியலுக்கு இந்த துன்பம் வருகிறது. இதற்கு பரிகாரம் செய்யவும்" என்றனர். அதையும்தான் செய்து பார்ப்பது என அவர்கள் முடிவெடுத்தனர். மதுரையை விட்டு வெளியில் ஏதோ ஒரு இடத்தில் பரிகாரம் செய்ய வேண்டியதாக இருந்தது. அப்படி போகையில் டேனியலை பத்திரமாக பார்த்துக்கொள்ள வேண்டி, விருதுநகரில் உள்ள

குடும்ப நண்பர் கோமதியம்மாளிடம், அவனை கொண்டு விட்டனர். அவரிடம் ரூபா-தாமஸ் தம்பதியினர் "இவனுக்கு தலைவலி வருகையில் எல்லாம் இந்த டானிக்கை தரவும். தராவிடில் அவன் அழுவான். நான்கு நாட்களில் நாங்கள் வந்து விடுகிறோம்" என்று கூறி டானிக்கையும் கொடுத்து சென்றனர்.

அவர்கள் சென்ற பின், டேனியலுக்கு வழக்கம் போல் தலைவலி வந்திருக்கிறது. உடனே டேனியல் "பாட்டி, அந்த டானிக்கை கொடுங்கள். நான் தூங்க போகிறேன்" என்றிருக்கிறான். ஏழே வயதான சிறுவனுக்கு தொடர்ச்சியாக ஒரு டானிக்கை தருவதா? அதுவும் ஒரு தலைவலிக்கா? கோமதியம்மாவிற்கு ஒன்றும் டேனியலை பற்றிய முழு அனுபவம் இல்லையே? அதனால் டேனியலை மடியில் கிடத்தி, நம் ஸ்வாமிஜியை மனதில் வணங்கியவாறே, "ஹரே ராம" மஹாமந்திரம் சொல்ல தொடங்கி உள்ளார். அந்த கீர்த்தனத்தினால் டேனியல் இரண்டே நிமிடங்களில் தூங்கிவிட்டான். என்ன ஆச்சரியமென்றால் அவன் டானிக்கை குடிக்கவில்லை. எழுந்த பின்னரும் கேட்கவில்லை. அவன் கோமதியம்மாவிடம் "பாட்டி! நீங்கள் என்ன பாடினீர்கள். எனக்கு அதை கேட்டு தலைவலியும் பறந்தது. தூக்கமும் வந்ததே" என்று கேட்டான். அதற்கு கோமதி நம் ஸ்வாமிஜியின் படத்தை காட்டி, இவர் முன் அமர்ந்து "ஹரே ராமா ..." சொல். உனக்கு தலைவலியே வராது" என்று கூறி மஹாமந்திரத்தை சொல்லும் விதத்தையும் சொல்லி இருக்கிறார்கள். அவனுக்கோ அதை சொல்ல வரவில்லை. அதனால் வெறுமனே "ஹரே ராமா ஹரே கிருஷ்ணா" என்று மட்டும் சொன்னான். அந்த நான்கு நாட்களும் அதிகமாக அவன் இந்த பஜனையைத்தான் செய்தான். டானிக்கும் எடுத்து கொள்ளவில்லை. தலைவலிக்கு, இந்த வைத்தியம் மிக நன்றாக வேலை செய்திருக்கிறது.

நான்கு நாட்கள் கழித்து, பரிகாரமெல்லாம் முடித்து, பெற்றோர் வந்து குழந்தையை கூட்டி சென்றனர். மதுரை சென்றபின்னும் டேனியலுக்கு தலைவலி விட்டபாடில்லை. அன்னை ரூபா டேனியலுக்கு கொடுப்பதற்காக டானிக்கை எடுத்தார். அப்பொழுது பார்த்தால் டானிக்கின் அளவு குறையவே இல்லை என்பதை கவனித்தார். "ஏனப்பா உனக்கு அந்த பாட்டி டானிக்கையே

தரவில்லையா? என்று வினவி இருக்கிறார் ரூபா. அவனும் "ஆமாம்! மம்மி அவர்கள் எனக்கு டானிக் கொடுக்காமல் "ஹரே ராமா கிருஷ்ணா"தான் கற்று கொடுத்தார்கள். எனக்கு தலையை கோதி விட்டபடி அதை பாடுவார்கள். எனக்கு தலைவலியே வரவில்லை" என்றான். இதோ அவர்கள் கொடுத்த ஸ்டிக்கர் என்று நம் ஸ்வாமிஜியின் படத்தை காண்பித்திருக்கிறான். பிஞ்சு உள்ளம் என்பதால், ஒன்றும் அறியாமல் அன்னையை பார்த்து "மம்மி நீங்களும் ஹரே ராமா சொல்லுங்கள். எனக்கு தலைவலி சரியாகி விடும்" என்றான்.

அதைக் கேட்டவுடன் ரூபாவிற்கு கோபமும் ஆத்திரமும் வந்தது. குழந்தையை பார்த்து கொள்ள விட்டு சென்றால், இப்படி ஆகி விட்டதே? நேரே விருதுநகர் வந்தார். கோமதியை பார்த்து "இதுதான் நீங்கள் குழந்தையை பார்த்துக்கொள்ளும் லட்சணமா? உங்களை நம்பி என் குழந்தையை ஒப்படைத்து சென்றால், அவன் ஏதேதோ சொல்கிறான்? எதற்கு என் பிள்ளைக்கு இதெல்லாம்?" என்பது போன்ற பல வார்த்தைகளும் தவறான சொற்களும் கூறி கடுமையாக திட்டி விட்டார். கோமதியும் பொறுமையாக "இந்த மந்திரம் சகலருக்கும் ஏற்றமானது. நல்லது நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் செய்தேன். நல்லதே நடந்தது. நீங்களும் இதை சொல்லி வந்தால் ஸர்வ நிச்சயமாக டேனியலுக்கு தலைவலி குணமாகும்" என்றார். இப்பொழுது ரூபா கோபத்தின் எல்லைக்கே சென்று விட்டார். "நீங்களும் உங்கள் குருநாதரும்" என்று மஹாமந்திரம் பொறித்த ஸ்டிக்கரைக் கிழித்து கோமதியின் முகத்தில் வீசி எறிந்து சென்றார்.

நான்கு நாட்கள் டேனியல், டானிக் இல்லாமல் இருந்தான் என்பதை, அவர் கவனத்தில் கொள்ளவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. கோபம் வருகையில், அறிவின் பலம் குறைகிறதல்லவா? விருதுநகரிலிருந்து மறுபடி மதுரை சென்றாலோ, டேனியலின் தலைவலி எதற்கும் கட்டுப்படவில்லை. டாக்டரிடம் அழைத்து சென்று மருந்துகள் கொடுத்தும், அது கேட்கவில்லை. குழந்தை சொன்னான் "மம்மி! பேசாமல் என்னை விருதுநகர் பாட்டியிடம் கொண்டு விடுங்கள். எனக்கு தலைவலி சரியாகி விடும்"

என்றான். குழந்தை அல்லவா! பொய் பேசாதே! அதனால் மனமுருகிய ரூபா அவர்கள், கோமதிக்கு போன் செய்து, இரு நாட்களில் உங்களை பார்க்க வருகிறோம் என்றார்.

கோமதிக்கு இப்பொழுது சற்று பயமாக இருந்தது. நல்லது செய்ய போய் மாட்டி கொண்டேனே என்று நினைத்தவாறு நம் ஸ்வாமிஜி படத்தின் முன்னால் அமர்ந்து, "ஹரே ராம" மஹாமந்திரம் கீர்த்தனம் செய்தவாறு இருந்தார். ரூபா-தாமஸ் தம்பதிகளும் டேனியலும் வந்தனர். டேனியல் நேராக கோமதியிடம் வந்து "பாட்டி! அந்த ராமா கிருஷ்ணா பாட்டு படியுங்கள்" என்றான். கோமதியும் அவனை மடியில் படுக்க வைத்து உரக்க "ஹரே ராம" மஹாமந்திரத்தை சொன்னார். பெற்றோர்கள் முன்னிலையிலேயே தலைவலியால் துடித்து கொண்டிருந்த டேனியல் அப்படியே தூங்கி விட்டான். அசந்து போய் விட்டனர் அந்த பெற்றோர். கேள்விப்படுவதும், அனுபவமும் வேறு வேறு அல்லவா? கண் முன் நடப்பதை எப்படி பொய் என்பது? கோமதியிடம் மன்னிப்பு கேட்டார் ரூபா. அவருக்கு மஹாமந்திரத்தின் ஆற்றல் தெரிந்தது. மஹாமந்திரம் மதங்களுக்கு அப்பாற்பட்டது என்று கோமதியும் எடுத்துரைத்தார். "அம்மா! மேற்கொண்டு நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார் ரூபா. உடனே கோமதி "உங்கள் இறைவன் இயேசுநாதரின் படத்தின் முன்னால் எங்கள் ஸ்ரீஸ்வாமிஜியின் படத்தையும் வைத்து கொள்ளுங்கள். இயேசுநாதரின் முன்னால் உங்கள் முறைப்படி மெழுகுவர்த்தி ஏற்றி மஹாமந்திரம் சொல்லுங்கள்" என்றார். அப்படியே ரூபா அவர்களும் செய்து வர, டேனியலுக்கும் தலைவலி குணமாகி அவன் நலம் பெற்று வருகிறான்.

கடவுளுக்கும், மஹான்களுக்கும் மதம் ஏது? அதனால்தானே மாணிக்கவாசகர் திருவெம்பாவையில், "அவனுக்கு ஆர் உற்றார்? ஆர் அயலார்?" என்கிறார். இதைத்தானே "என் பெயரால் எதை கேட்டாலும் அதை தருவதாக இயேசு சொல்கிறார்" என்று பைபிளும் சொல்கிறது! Jesus, Thou hast said, "If you ask Me anything in My name, I will do it." (John 14:14.). இன்ன மதத்தவர் என்ற பாகுபாடு, கடவுளுக்கு கிடையாது. நமக்குத்தான் அது!

## *சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**ஏப்ரல் 2 – 12 – சென்னை ப்ரேமிகபவனத்தில் ராமநவமி உர்சவம் –** சென்னை ப்ரேமிக பவனத்தில் பத்து நாட்கள் ராமநவமி உற்சவம் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. தினமும் காலையில் ராமாயண மூல பாராயணமும், மாலையில் "ராம" கீர்த்தனங்களும் பாடப்பட்டன. இதில் ஒரு வாரம் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

ஸ்ரீ ராமநவமி அன்று மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீனிவாசபெருமாள் கோவில் ஸ்ரீபட்டாபிராமருக்கு விசேஷ திருமஞ்சனமும் மாலை புறப்பாடும் நடைபெற்றது. மஹாரண்யம் கிராமத்தில் அமைந்துள்ள புராதனமான கோதண்டராமர் சன்னதியில் திருமஞ்சனம், ஆராதனை, ராமாயண பாராயணம், நகர சங்கீர்த்தனம், அன்னதானம் முதலியவை ஸ்ரீஸ்வாமிஜியின் நியமனப்படி வெகு கோலாகலமாக நடைபெற்றது.

ஸத்குருநாதரின் ஆசீர்வாதங்களுடன் GOD ஸத்ஸங்கம் சார்பாக உடுமலைப்பேட்டையில் ஸ்ரீராமநவமி விழா மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. உடுமலைப்பேட்டை நெல்லுக்கடை வீதியில் அமைந்துள்ள பூமிநீளா ஸமேத ஸ்ரீசௌந்திரராஜ பெருமாள் கோவிலில் காலை ஆறுமணி முதல் மாலை ஆறு மணி வரை சத்சங்க அன்பர்களால் அகண்டமாக நாமகீர்த்தனம் செய்யப்பட்டது. மாலை 6மணியிலிருந்து 6.30வரை நம் குருநாதரின் மகிமையும் நாம மகிமையும் பக்தர்களுக்கு எடுத்து சொல்லப்பட்டது. மேற்படி வைபவம், நமது ஸத்ஸங்கத்தை சார்ந்த ஸ்ரீமதி பிரமீளா சந்திரசேகர் அவர்களின் தலைமையில் நடந்தது. கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. ஏப்ரல் 14 - 20 தேதிகளில், ஸ்ரீபெரும்புதூர் நாமத்வாரில் ஸ்ரீசுந்தர் அவர்களது பக்த விஜயம் உபன்யாசம் மிக சிறப்பாக நடந்தது.

**ஏப்ரல் 14 – ஏகாதசி– சித்திரை 1 – மதுரபுரி ஆஸ்ரமத்தில்** ப்ரேமிகவரதன், கல்யாண ஸ்ரீனிவாசபெருமாள், கன்யாகுமரி ஜயஹனுமார் ஆகியோருக்கு சிறப்பு பூஜைகள் நடந்தது. மாலை ஜயஹனுமாருக்கு பூரண வடைமாலை சாற்றப்பட்டு, **லக்ஷதீபம் ஏற்றப்பட்டது.** திரளான பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி

## தன்வந்தீ பாயி - 2

நாடகத்தில் ஸுதாமாவை ஆலிங்கனம் செய்து கொண்ட ஸ்ரீக்ருஷ்ணனின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியதைக் கண்ட தன்வந்தீபாய், துக்கத்தின் காரணமாக ஸுதாமாவுடன் ஒன்றி விட்டாள். கிருஷ்ணன் தன்னையே ஆலிங்கனம் செய்து ஆச்வாஸப்படுத்துவதாக எண்ணி, பரம சாந்தியை அளிப்பதாக உணர்ந்தாள்.

முன்பும் பல முறை தன்வந்தீபாய் அழுதிருக்கிறாள். ஆனால் அதுபோல் அல்ல, இப்பொழுது அவளது அழுகை. முதலில் அவள் தனது கணவனை பிரிந்ததால் அழுதாள். ஆனால் இப்பொழுது அவள் அழுதது, பகவானை பாவனையில் அடைந்து, பின் அவனை பிரிந்ததால் உண்டானதாகும். முதல் அழுகை துக்கமயமானது. இந்த அழுகையில் துக்கம் இருந்தபோதிலும், இதில் ஒரு அபூர்வ ஸுகத்தை அவள் உணர்ந்தாள். முதல் அழுகை பொய்யானது, காலத்தின் போக்கில் அழிந்து விடக்கூடியது. அதற்கு ஒரு முடிவு என்பது நிச்சயம் உண்டு. ஆனால் இந்த அழுகைக்கு முடிவு என்பதேயில்லை! இது காலப்போக்கில் வளர்ந்து கொண்டே போகும். இது கிருஷ்ண சரணத்தையடைந்த பின்பே ஓய்வடையும்.

பல நாட்களுக்கு தன்வந்தீ பாயியின் சோகத்திற்கு, அவளது வைதவ்யமும் ஸம்ஸார துக்கமும்தான் காரணம் என்று எண்ணி வந்தனர். ஆனால், அவளது உறவினரான ஸந்த் ஸ்ரீரூபமாதுரிஜீ என்பவருக்கு இதை புரிந்து கொள்ள வெகுகாலமாகவில்லை. அவர் ஸுக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஒரு ஸாது. அவர் தன்வந்தீபாயியை ஸமாதானம் செய்து, உபதேசம் அளித்து, ஸுக ஸம்ப்ரதாயத்தின் ரஸமான ஸாதனைகளை, அவளுக்கு தெளிவாக புரியவைத்து, தனது குருநாதரான ஸ்ரீஸரஸ மாதுரிஜீ என்பவரிடமிருந்து தீக்ஷை பெற வைத்து, ஸாதனை வழியில் அவளை திருப்பிவிட்டார். இந்த வழியில் தன்வந்தீ பாய் மிகவும் வேகமாக முன்னேற தொடங்கினாள்.

அவளுடைய இந்த புது பித்து, அவளது பெற்றோர்களுக்கு சிறிதும் பிடிக்கவில்லை. அவள் குருதேவரின் ஸத்ஸங்கத்திற்கு அடிக்கடி செல்வதிலும், அவர்களுக்கு ஸம்மதமில்லை. இதனால் அவர்கள் தன்வந்தீயை மிகவும் கடிந்து கொண்டனர். ஒரு முறை அவளுக்கு உடல் நிலை மோசமாக இருந்தது. படுக்கையிலிருந்து கூட, அவளால் எழுந்து கொள்ள முடியவில்லை. அந்நிலையில் அவள் குருதேவரை காண முடியாமல் மிகவும் தாபமடைந்தாள்.

அச்சமயம் குருதேவர் பக்தர்களின் நடுவில் அமர்ந்து ஸத்ஸங்கம் செய்து கொண்டிருந்தார். திடீரென்று அவர் எழுந்து கொண்டார். அவர், "தன்வந்தீ என்னை மிகவும் நினைக்கிறாள். போய் அவளை பார்க்கலாம்" என்று கூறினார். முன் அறிவிப்பில்லாமல் அவர் வந்ததால் எல்லோரும் பரபரப்படைந்தனர். தன்வந்தீ அவரை எழுந்து வணங்க முயன்றாள். ஆனால் அவர் அதை அனுமதிக்கவில்லை. அவளை படுக்க வைத்து, அவளது தலைமாட்டருகில் சென்று அமர்ந்தார். அவளது தலையில் கை வைத்து சிறிது நேரம் கண்களை மூடியபடி அமர்ந்திருந்தார். பின் அவர், "ஸுகதேவரின் க்ருபையால் இவள் பூரண குணமடைவாள். இவள் ப்ருந்தாவனத்தில் வஸித்து பல பேருக்கு மங்களங்களைச் செய்வாள்" என்று கூறினார்.

குருதேவர் கூறியது போல், அவள் உடல்நிலை தேறியது. இப்பொழுது அவள் மனம் பிருந்தாவனம் செல்ல துடித்தது. அப்பொழுது அவள் வீட்டு வழியாக, காவலர்கள் ஒரு இளம்பெண்ணுடன் ஒரு வாலிபனையும் பிடித்து இழுத்து செல்வதை பார்த்தாள். அவர்களிருவரும் கட்டுப்பாடுகளை மீறி ஸம்பிரதாய விரோதமாக நடந்து கொண்டது அவர்கள் செய்த தவறு. நடுவழியில், மக்கள் காவலர்களை பார்த்து, "ஐயா! இவர்கள் சிறுவர்கள்! ஒன்றும் அறியாதவர்கள். தெரியாமல் தவறிழைத்து விட்டனர். இனி அவர்கள் பிரிந்து வாழ்வர் என்ற ஒப்பந்தத்தின் பேரில் இவர்களை விடுவித்து விடுங்கள்" என்று மன்றாடினர். தன்வந்தீ அப்பொழுது என்ன நினைத்தாள்?

(தொடரும்)

## மாலே மணிவண்ணா – 95

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

உலகப் படைப்பு நிகழுமாற்றைத் தத்துவங்களின் மூலமாகச் சொல்வது சமயங்களின் வழிமுறையாகும்.

சைவசமயம் 36 தத்துவங்கள் என்று சொல்லும். சிவதத்துவம் 5. வித்தியாதத்துவம் 7. ஆன்மதத்துவம் 24 என்பது அதன் விரிவாகும். உலகம் 24 தத்துவங்களால் ஆகியது என்பது வைஷ்ணவ நெறி. இருபத்தைந்தாவது தத்துவம் உயிர். இருபத்தாறாவது தத்துவம் இறைவன் என்பது வைஷ்ணவ நெறி.

ஐந்து பருப்பொருள்கள் (பஞ்ச பூதங்கள்)நிலம், நீர், தீ, காற்று, வான். ஐந்து அறிகருவிகள் (ஞானேந்திரியங்கள்) மெய், வாய், கண், மூக்கு, செவி. ஐந்து தொழிற்கருவிகள் (கன்மேந்திரியங்கள்)வாய், கை, கால், குதம், குறி. ஐந்து நுண்பொருள்கள் (தன்மாத்திரைகள்)சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். இவற்றோடு மனம், முனைப்பு(அகங்காரம்), மான் (மஹான் - மஹத்) என்னும் மூன்று , (அவ்யக்தம்) விளக்கமில் பகுதி எனப்படும் மூலப்ரக்ருதி ஒன்று. ஆக 24 தத்துவங்கள்.

எம்பெருமான், ஒருவகையில் இத்தத்துவங்களாகவே ஆகிறான். இவை அனைத்திற்கும், உயிராய் நின்று இவற்றின் இருப்பினை நோக்குகின்றான். காரண நிலையில், கண்ணுக்குப் புலப்படாமல், இவற்றில் நிறைந்து நின்று, தன்மேல் ஏறிட்டுக் கொள்கிறான். காரிய நிலையில் அவ்யக்தம், மஹான், அகங்காரம் இவற்றிலும் நுண்ணியதாய் நிறைந்தும் இவற்றைப் பாதுகாக்கிறான். இவற்றைக் கொண்டு எம்பெருமான் உலகைப் படைப்பதன் நோக்கம், கருவியும் உடலும் இழந்து, உலக போக அனுபவமும் வீடுபேறும் இன்றி அறிவில்லாப் பொருள்களினின்று வேறுபாடின்றிக் கிடக்கும் உயிர்கள், கருவியும் உடலும் பெற்றுத் தன் திருவடிகளை அடையக் கருணை மீக்கூர்ந்து அவன் செய்யும் உபகாரமேயாகும்.

இந்தத் தத்துவ விளக்கம் வைஷ்ணவ சமயத்தின் உயிர்க் கொள்கை; 2000 ஆண்டுகளுக்கு முந்திய பரிபாடலில் விரிவாகப் பேசப்பெற்றுள்ளது.

*சுவைமை இசைமை தோற்றம் நாற்றம் ஊறு*

*அவையும் நீயே அடுபோர் அண்ணால்!*

*அவை அவை கொள்ளும் கருவியும் நீயே* என்கிறார் பரிபாடல் ஆசிரியர்.

"அடுபோர் அண்ணால்!" என்பது எம்பெருமானை நோக்கிய விளி; வெல்லும் (கொல்லும்) போரினைச் செய்தலில் தலைமையானவன்; தனக்கு நிகரற்றவன் என்று பெருமானை அழைக்கிறார்.

"புகழ் ஒத்தீயே இகழுநர் அடுநனை" என்பது புறநானூறு. தன்னை இகழ்வாரை அழிப்பதில் சிறந்தவனாகிய மணிவண்ணனைப் புகழால் ஒத்திருக்கின்றாய் என்று ஓர் அரசனைப்போற்றுமிடத்துச்சொல்கிறார். இதையே, "அவன் உணர்ந்து எழுந்த காலத்து அவுணர்கள் படுவர்" என்று கம்பர் கூறினார். அறிதுயில் கொண்ட பரந்தாமன் துயில் நீங்கி விழித்தெழுந்த அனலிலேயே அவுணர்கள் அழிந்து வடுவார்கள் என்ற கருத்தையே அடுபோர் அண்ணால்! என்று கூறியது பரிபாடல்.

சுவை, ஒலி, ஒளி, நாற்றம், பரிசம்(ஊறு) என்ற தன்மாத்திரைகள் ஐந்தும். அந்தவிடயங்களைக் கொள்ளும் அறிகருவியாகிய வாய், செவி, கண், மூக்கு, மெய் என்ற ஞானேந்திரியங்களும் நீயே என்று எம்பெருமானைத் தத்துவ வடிவினனாகக் காண்கிறார் நல்லெழுநியார்.

ஞானேந்திரியங்களாகிய அறிகருவிகளைக் கூறவே, தொழிற் கருவிகளாகிய கன்மேந்திரியங்கள் வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்னும் ஐந்தும் கூறப்பட்டதாக ஆயிற்று என்பதைக் குறிப்பால் உணரலாம்.

(தொடரும்)

## சனாதனப் புதிர் - பகுதி - 27

( விடைகள் அடுத்த இதழில்)

–ஆத்ரேயன்

1.காயத்ரி ஸஹஸ்ரநாமம் எந்த நூலில் காணப்படுகிறது?

2.ராதையின் பிரபாவங்கள் தேவி பாகவதத்தில் காணப்படுகின்றன - காண்டம், அத்தியாயங்கள் என்ன?

3.15 திதிகள், 7 நாட்கள்; 27 நக்ஷத்திரங்கள்; 27 யோகங்கள்; 11 கரணங்கள்; 12 மாதங்கள் இவைகளில் பூஜை செய்யும்பொழுது பலன், மேலும் நிவேதனங்கள் எங்கே சொல்லப்பட்டு இருக்கின்றன?

4.தேவி பாகவதம் எத்தனை ஸ்கந்தங்கள்? எத்தனை அத்தியாயங்கள்? எத்தனை ஸ்லோகங்கள்?

5.சர்ககஸ்ச, ப்ரதி சர்ககஸ்ச வம்மோ, மந்வந்தராணிச, வம்ஸாநு சரிதஞ்சைவ புராணம் பஞ்ச லக்ஷணம் - ஐந்து இலக்கணங்களை உடைய புராணம் எது?



## அப்பாலுக்கு அப்பால்

**ம ர**



மாயையால் அல்லமபிரபுவை கட்டிக்கொள்ள முடியாமல் போனதன் காரணம், அப்படி கட்டி கொள்கையில் அவளுக்கு தான் ஒரு வெற்றிடத்தை கட்டி கொள்வதாக உணர்ந்தாள். அதாவது, அவரை தொடும் உணர்ச்சி அவளிடம் சிறிதும் உண்டாகவில்லை. அல்லமர் சாதாரணமானவர் இல்லை என்பது அதுவரை அவளுக்கு தெரியாது. அல்லமபிரபு அவளை விட்டு விலகினார். அவளுக்கு தன் அவதார காரிய நோக்கம் தோற்றது புரிந்தது. அவள் பார்வதியை சென்றடைந்தாள்.

உண்மையில் கைலாயத்தில் இருந்து கிளம்புகையில் அல்லமரை மாயையில் சிக்க வைப்பேன் என்று சூளுரைத்து வந்தவள் மாயை. தான் அல்லமரிடம் தோற்றவுடன் மிகுந்த வருத்தம் கொண்டாள் மாயை. அவள் தந்தையான மமகாரராயனும், அல்லமரை சோதித்ததற்காக அவளை மிகவும் கடிந்து கொண்டான். அல்லமபிரபு தன்னை விட்டு பிரிந்ததால், விரஹம் தாங்காமல் உயிரை விட்டாள் மாயை என்றும் சொல்பவர் உண்டு.

கைலாயத்தில் பார்வதியும் சிவபெருமானின் பக்தரை சோதித்ததற்காக மிக வருந்தினாள். அப்பொழுது சிவனாரின் ஆலோசனைப்படி, பார்வதியின் சாத்வீக குண அம்சமாக மற்றொருவள் வந்தாள். அவள் அல்லமரின் ஹிருதயத்தில் சிவபக்தி ஒளி விடுவதை கண்டு, அவரிடம் ஆத்மசமர்ப்பணம் செய்து சரணங்களில் வீழ்ந்தாள். இதனால் பார்வதிக்கும் மகிழ்ச்சி உண்டாகியது.

வீர சைவ மதமான லிங்காயத மதத்தில் லிங்கபூஜை மிக முக்கியம் என்றாலும், அம்மதத்தை பொறுத்தவரை, சிவபெருமான் என்பவர் நாமரூபங்களை கடந்த பரப்ரும்ம வஸ்து. அதன்படி, முதலில் பரப்ரும்ம வஸ்து, சிருஷ்டியின் ஆரம்பத்திலும் சிருஷ்டிக்கு முன்னரும் தனித்தே இருந்தது. அதன் சங்கல்பத்தினால்தான், அதிலிருந்து தோன்றிய சக்தியிலிருந்து, தேவதைகளும் ஸகல உலகங்களும் ஜீவராசிகளும் தோன்றின. (இந்த பகவானையே அருணகிரிநாதர் திருப்புகழில் "நாதவிந்து கல ஆதி நமோ நம" என்கிறார். இவ்விஷயத்தை அல்லமரை போன்ற சிவசரணர்கள் நிறைய பாடி உள்ளனர்.) அல்லமரை போன்ற

சிவசரணர்களை பொறுத்தவரை உலகம் மாயை (இல்லாத வஸ்து) அல்ல. இந்த உலகப்பொருள்களின் மேல் கொள்ளும் மோகமே மாயை. இந்த உலகமாகவும் அந்த ஒரே பரவஸ்துதான் மாறி இருக்கிறார். கபாலமும், கங்கையும், அக்னியும் தரித்த சிவமூர்த்தி உள்ளிட்ட மும்மூர்த்திகளும் அந்த பரவஸ்துவிலிருந்து வந்தவர்களே.

தற்கால விஞ்ஞானத்தில் கூட பிக்பேங்க் தியரியை சொல்கின்றனர். தனியாக இருந்த ஒரே வஸ்துவில் நிகழ்ந்த மாற்றத்தால் பெரும் சக்தி ஏற்பட்டு ஏராளமான அண்டங்கள் படிப்படியாய் உருவாயின. ஹைட்ரஜன், ஆக்ஸிஜன் போன்ற சுமார் 92மூலப்பொருள்களின் சம்பந்தம்தான் உலகில் பலவித வஸ்துக்களை உண்டாக்குகிறது என்கின்றனர். நவீன விஞ்ஞானி ஐன்ஸ்டீன் ஜடப்பொருளை சக்தியாக மாற்ற முடியும் என்று நிரூபித்தார். சலனமற்ற ஜடப்பொருள் என்பது சக்தியை உள்ளடக்கியதே. அந்த சக்தியே பல வித ஜடப்பொருள்களாகவும் மாற முடியும். உலகில் நாம் ஒரு கொசு என்றால் இந்த உலகமே கூட முழு சிருஷ்டியில் ஒரு கொசு என்று சொல்லக்கூடிய அளவிற்கு சிருஷ்டியின் பரிணாமம் இருக்கிறது என்று விஞ்ஞானிகள் தற்பொழுது ஒப்புக்கொண்டுள்ளனர். இந்திய ரிஷிகளின் கருத்திற்கோ அல்லமரை போன்ற சிவ சரணர்களின் கருத்திற்கோ இதில் பேதமே இல்லை. ஆனால், அவர்கள் கூறிய அளவு விஞ்ஞானம் இன்னும் சொல்லவில்லை என்பதே உண்மை.

எங்கு ஒன்றுமில்லையோ அங்கு எல்லாம் அடங்கும். அதாவது அது எல்லாவற்றையும் உள்ளடக்கும். நீரில் நிலமும், நெருப்பில் நீரும், காற்றில் நெருப்பும், ஆகாசத்தில் காற்றும் ஒடுங்கும். அந்த ஆகாசம் பூர்ணமான வஸ்துவிடத்தில் ஒடுங்கும். இங்கு ஆகாசத்தையும் தன்னுள் கொண்ட பூர்ண வஸ்து வெற்றிடம் அல்லது சூனியம் எனப்படுகிறது. அது ஒன்றும் அற்றதல்ல; எல்லாம் அடங்கியது.

தற்கால விஞ்ஞானத்திலும், வெற்றிடத்தில் ஏற்பட்ட ஒரு அதிர்வே சிருஷ்டி என வெளிப்பட்டு இருக்கிறது என்றும் சொல்கின்றனர். இங்கு வெற்றிடம் என்பது கற்பனைக்கும் விஞ்ஞானத்திற்கும் எட்டாத வஸ்து என்று புரிந்து கொள்வது நல்லது.

இந்த பூரணமே கருணை காரணமாக லிங்கமாக தோன்றியது என்பது வீர சைவமதத்தின் கொள்கை. அதன்படி, ஐம்முகம் கொண்ட சதாசிவரும், திரிமூர்த்திகளும், ஸகல லோகங்களும் லிங்கத்திலிருந்தே வந்தனர். இம்மதத்தை தோற்றுவித்தவர் பசவேஸ்வரர். இவருக்கும் அல்லமருக்கும் நிறைய சம்பந்தம் உண்டு.

இந்த பூர்ண வஸ்துவின் (void) அவதாரம்தான் அல்லமபிரபு. தாம் பூரண வஸ்து என்பதை அல்லமரே பல இடங்களில் தமது வசனங்களில் குறிப்பிடுகிறார். அவர் இந்த வெற்றிடம் எனப்படும் பூர்ணத்தின் அவதாரம் ஆனபடியால்தான் மாயையால் அவரை கட்டிப்பிடிக்க முடியவில்லை. கைலாயத்தில் இருந்த நிர்மயா என்ற சிவபக்தரே பூமியில் அல்லமராகவும், பார்வதியின் பக்தையாக இருந்தவளே கமலாதை என்பவளாகவும் பிறந்து இல்வாழ்க்கை நடத்தினர் என்றும், தகுந்த சமயத்தில் கமலாதை சிவலோகத்திற்கு பிரிந்து சென்றாள் என்றும் ஒரு சாரரின் கதையும் உண்டு. எப்படியெனினும், இதன் பின் வரும் அல்லமரின் வாழ்க்கை சம்பவங்களில் மாற்றங்கள் இல்லை.

(தொடரும்)

சனாதனப் புதிர் : பகுதி – **26** விடைகள் –ஆத்ரேயன்

1. ஜான்ஹவி ; அம்ஸுமதி (வடக்கில் இருந்து கிழக்கே போகும் நதிகள்).
2. சப்த சிந்து ; ஸரஸ்வதி (வடக்கில் இருந்து மேற்கே போகும் நதிகள்).
3. தேவி பாகவதம் ஏழாம் ஸ்கந்தம் ஸர்க்கம் 14 அதுவரை
4. தேவி பாகவதம் ஸ்கந்தம் எட்டு ; அத்தியாயங்கள் 22 ; 23 ; 28 விதமான நரகங்கள் தாமிஸ்ரம் முதல் சூசிமுகம் வரை.
5. அம்பாளின் 108 பீடங்கள். தேவி பாகவதம் - ஸ்கந்தம் ஏழு- அத்தியாயம் 30 - இருக்கும் இடங்கள் - தேவியின் பெயர்கள் விரிவாகச் சொல்லப்பட்டு இருக்கின்றன.

மதுரமுரளி சந்தாதாரர் ஆக விரும்புகிறவர்கள் Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th avenue, Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/-ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை / டி.டி. / மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டு கொள்கிறோம். ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு அணுகவும்: PH: +91-44-24895875

Madhuramurali

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

## நிகழ்ச்சிகள்

மே 9-15 சென்னை மேல மாம்பலம் - அயோத்யா மண்டபம் - பௌண்டரீகபுரம் ஸ்ரீ உ.வே. பாலாஜி அவர்களின் பாகவத உபன்யாசம்

## ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| மே 14, 28 | ஏகாதசி - ஜுன் 12, 27 |
| ஏப் 30 | வராஹ ஜெயந்தி -பெங்களூர் ராமமூர்த்தி நகர் கல்கரே கிராம ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் பிரதிஷ்டா தினம் |
| மே 6 | மயிலாப்பூர் சமஸ்கிருத கல்லூரி உபன்யாசம் |
| மே 10-16 | மதுரபுரி ஆஸ்ரமம் - உதயாஸ்தமன பாகவத சப்தாஹம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.